
பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 28 | செவ்வாய்க்கிழமை | 12.03.2024 | அதிர்வு 224

## காலியில் இருவர் சுட்டுப் படுகொலை

### ஐவர் படுகாயம்



காலியில்நேற்று இரவு இருவேறு இடங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள் 06



### ஐ.எம்.எவ். முன்மொழிவுகள் பற்றிய

# ஜனாதிபதியுடனான சந்திப்பில் சுமந்திரன் மாத்திரம் பங்கேற்பு

சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அழைக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே பங்கேற்றது. அதன் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொண்டார். 07

### வெடுக்குநாறிமலையில் அரங்கேறிய

## பொலிஸ் அராஜகத்தைக் கண்டித்து நல்லூரில் நேற்று பெரும் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

வவுனியா வடக்கு – வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் அரங்கேறிய பொலிஸ் அராஜகத்தைக் கண்டித்து யாழ்ப்பாணம் – நல்லூரில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 06



சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு எதிர்க்கட்சிகளின் தலைவர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்திருந்த போதிலும், நேற்று நான் இப்பத்தியில் குறிப்பிட்ட மாதிரி சுமந்திரன் மாத்திரமே நேற்று அக்கூட்டத்தில் பங்குபற்றினார்.

சஜித் பிரேமதாஸ, அனுரகுமார திஸநாயக்க போன்றோர் இக்கூட்டத்தைப் பகிஷ்கரிக்கும் முடிவை எடுத்திருந்தனர் என்பது நேரத்துடனேயே வெளியாகி இருந்த 06



# சுத்தமான குடிதண்ணீர் வசதியைக் கோரி மூதூர் – சீதனவெளி மக்கள் கவனவீர்ப்பு!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தங்களது சீதனவெளி கிராமத்திற்கு சுத்தமான குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித்தருமாறு வலியுறுத்தி மூதூர் – சீதனவெளி கிராம மக்கள் நேற்றுத் திங்கட்கிழமை காலை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மூதூர் புளியடி சந்தியிலிருந்து பிரதான வீதியூடாக நடைபவனியாக மூதூர் பிரதேச சபைக்குள் நுழைந்து அங்கு கோசங்களை எழுப்பி, அவர்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

அத்தோடு மூதூர் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் மகஜரையும் கையளித்தனர்.

அதன் பின் மூதூர் பிரதேச சபையிலிருந்து பிரதேச செயலகம் வரை நடைபவனியாகச் சென்று பிரதேச செயலக வளாகத்தினுள் நுழைந்து அங்கும் தமது கோரிக்கைகளை முன்வைத்து கோசங்களை எழுப்பினர்.

அதன் பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஒரு சிலர் மூதூர் பிரதேச செயலாளரைச் சந்தித்து பேசியமையோடு மகஜரையும் கையளித்தனர்.

இது விடயத்தில் உரிய தரப்பினரிடம் பேசி நடவடிக்கை மேற்கொள்வார் என மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம். முபாறக் வாக்குறுதி அளித்தமையை அடுத்து அங்கிருந்து அவர்கள் கலைந்து சென்றனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு 2012 இல் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மூதூர் – சீதனவெளி கிராமத்தில் 120 குடும்பங்களை சேர்ந்தோர் வசித்து வருகின்றனர். இப்பிரதேசத்தில் இன்னும் சுத்தமான குடிதண்ணீர் வசதி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.










## வெடுக்குநாறிமலையில் அரங்கேறிய

# பொலிஸ் அராஜகத்தைக் கண்டித்து நல்லூரில் நேற்று பெரும் போராட்டம்

(படங்கள்:- எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)










# சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின் கீழேயே இன்னமும் வாழ்ந்து வருகின்றனர் தமிழர்கள்

## வெடுக்குநாறிமலையில் பொலிஸாரின் அட்டூழியம் இதை மீளவும் எடுத்துக்காட்டியுள்ளது என்கிறார் விக்கி



**“மகா சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த பக்தர்கள், வலுக்கட்டாயமாகப் பொலிஸாரால் அகற்றப்பட்டு சிலரைக் கைது செய்த சம்பவம் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின் கீழ் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள் என்ற பேருண்மையை மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றது.”**

**- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

”இன்று பத்திரிகை ஒன்றில் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் ஒரு கூற்றை வாசித்தேன். அதில்,

1. இலங்கையின் புராதன நாகரிகம் சம்பந்தமான வரலாறுகளை அடுத்த சந்ததிக்குக் கொண்டு போவதே தமது சமய கலாசார அமைச்சின் பிரதான நோக்கமாக உள்ளது என்றார்.

2. வெடுக்குநாறிமலை வனப் பிரதேச பரிபாலன திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. அத்துடன் அது ஒரு தொல்பொருள் பகுதி என்றார்.

3. குறித்த திணைக்களங்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பகுதிகளில் தண்ணீர்பௌசர், உழவு இயந்திரங்கள் போன்றவை கொண்டு செல்வது சட்டமுரணானது என்றார்.

4. பொதுமக்கள் குறித்த இடங்களில் நடமாட முடியாது என்றார்.

5. தமிழ் அரசியல் தலைவர்கள் தமது சுயலாபம் வேண்டி மக்களைத் தூண்டிவிட்டுள்ளனர் என்றார்.

6. வெடுக்குநாறிமலையிலுள்ள மக்களின் எதிர்ப்பு சிங்கள மக்களினதும் பௌத்த பிக்குகளினதும் எதிர்ப்பை வரவழைத்துள்ளது என்றார்.

7. அனைத்து தொல்பொருளியல் பகுதிகளும் பாதுகாக்கப்படும் என்றார்.

அமைச்சரிடம் இது சம்பந்தமாக எமது மக்கள் சில கேள்விகளைக் கேட்க விரும்புகின்றார்கள்.

1. வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் எந்த வகையில் தேசிய முக்கியத்தவம் பெறுகின்றது? அது ஒரு தேசிய தொல்பொருள் இடமா?

2. அதன் சுற்றுச்சூழலில் தமிழ் பௌத்தர் காலத்து பௌத்த கோயில் ஒன்று இருந்ததாயின் அதனைப் பாதுகாக்காமல் இந்துக் கோயிலில் வழிபடும் அடியார்களைத் துன்புறுத்துவது எந்தவிதத்தில் சட்டரீதியானதாகும் ?

3. நாட்டின் மற்றைய மாவட்டங்களில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருள் சின்னங்கள் அல்லது ஆலயங்கள் இருந்தால் அதனைச் சுற்றியுள்ள சமயத் தலங்களில் எந்த வித வழிபாடுகளும் எவராலும் நடத்தப்படக்கூடாது என்று சட்டம் விதித்துள்ளீர்களா? இதற்கு உங்களுக்கு அதிகாரம் கொடுத்தது யார்?

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய சம்பவம் வெறும் தொல்பொருள் பாதுகாப்பு விடயமன்று. அரசுடன் தொடர்புடைய சிங்கள பௌத்த நிறுவனங்கள் மற்றும் பௌத்த பிக்குகள் வடக்கு – கிழக்கில் தமிழ் மக்களின் காணிகளைக் கையகப்படுத்தும் நீண்டகாலத் தந்திரத் திட்டத்தின் வெளிப்பாடே இது.

நாம் முடிந்தளவு இந்தத் திட்டத்தை உலகறியச் செய்து கொண்டிருக்கின்றோம். தற்போது எம்மக்களின் விசனத்தை, சினத்தை, வேதனையை வெளிக்கொண்டு வரும் செயற்பாடுகளுக்கு எனது கட்சியின் மனமுவந்த ஆதரவை இங்கு வெளியிடுகின்றேன்.

பொலிஸாரோ – இராணுவத்தினரோ இனியேனும் எமது மக்களின் கருத்து சுதந்திரத்தையும் மதச் சுதந்திரத்தையும் நசுக்க நடவடிக்கை எடுக்காதிருக்க இறைவனை வேண்டி நிற்கின்றேன்.” – என்றுள்ளது.



# தொல்லியல் பொலிஸ், திணைக்களங்கள்தான் இனநல்லிணக்கத்துக்கு ஆப்பு வைக்கின்றன!

## சாடுகின்றார் சமத்துவக் கட்சியின் சந்திரகுமார்

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டில் இனங்களுக்கிடையே இன நல்லிணக்கம் குறித்து சர்வதேச தரப்புக்கள் மட்டத்திலும் உள்நாட்டிலும் அதிகம் வலியுறுத்தப்பட்டு வருகின்ற நிலையில் துரதிர்ஷ்டவசமாக நாட்டின் தொல்லியல் மற்றும் பொலிஸ் திணைக் களங்கள் அவற்றுக்கு ஊறு விளை விக்கின்ற வகையில் தொடர்ச்சியாக செயற்பட்டுவருகின்றமை கவலைக் குரியது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொது செயலாளருமான மு. சந்திரகு மார் தெரிவித்துள்ளார்.

சிவராத்தி தினத்தில் வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் பொலீஸார் மேற்கொண்டு அடாவடித்தனமான செயற்பாடுகளைக் கண்டிக்கும் வகை யில் அவர் வெளியிட்ட அறிக்கையி லேயே இதனை தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-



சிவராத்திரி நிகழ்வு சைவ மக்களின் மிக முக்கிய நிகழ்வாகும். இந்த நாளில் மிகவும் பக்தி பூர்வமாக சிவ வழிபாட் டினை மேற்கொள்வதற்காக தங்களது பூர்வீக ஆலயத்திற்குச் சென்ற தமிழ் மக்கள் மீதும் அங்கு பூசை வழிபாடுக ளில் ஈடுப்பட்டவர்கள் மீதும் பொலீஸ ார் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டுள்ளனர். பொலீஸாரின் செயற் பாடுகள் பௌத்த - சிங்கள மேலாதிக்க மனநிலையின் வெளிப்பாடாகவே இருந்தது. புனித தலம் ஒன்றில் சப்பாத்து கால்களுடன் வெறுக்கத்தக்க வகையில் பொலீஸாரின் நடவடிக்கைகள் காணப்பட்டன.

நாட்டு மக்களிடையே இன மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தி சட்டத்தின் வழி மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் கடப்பாடுடைய பொலிஸ் திணைக்களம் தமிழ் மக்கள் விடயத்தில் அதற்கு மாறாக செயற்படுகிறது. இலங்கையை பொறுத்தவரை பொலிஸ் மற்றும் தொல் லியல் திணைக்களங்கள் இன நல்லி ணக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் செயற்பாடுகளையே மேற்கொள்கின்றன.

இந்த நிலை மாற்றப்பட வேண்டும். வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் நடந்து சம்பவங்கள் போன்று இனியொரு சம்பவம் இடம்பெறாத நிலை உருவாக்கப்படல் வேண்டும். அரச நிறுவனங்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். - எனவும் சந்திரகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் பாடசாலையில் இருந்து வெடிக்காத மோட்டர் குண்டுகள் மீட்பு

(கே.வசந்தன்)

வவுனியா, மடுகந்தை தேசிய பாடசாலையில் இருந்து வெடிக்காத நிலையில் 7 மோட்டர் குண்டுகள் நேற்று மீடகப்பட்டுள்ளன என மடுகந்தைப் பொலிஸார் தெரிவித் தனர்.

வவுனியா, மடுகந்தை தேசிய பாடசாலையில் இருந்த குப்பைக் குழியை துப்பரவு செய்த போது அந்தக் குழிக்குள் வெடிக்காத நிலையில் மோட்டர் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து பாடசாலை நிர்வாகத்தால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார், விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அப்பகுதியில் இருந்து 7 மோட்டர் குண்டுகளை மீட்டனர்.



மீட்கப்பட்ட மோட்டர் குண்டுகளை வவுனியா நீதிமன்றின் அனுமதியுடன் அழிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# ரமழான் நோன்பு இன்று ஆரம்பம்

புனித ரமழான் நோன்பு இன்று செவ்வாய்க்கிழமை ஆரம் பிப்பதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

ஹிஜ்ரி 1445 புனித ரமழான் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் பிறைக்குழு மாநாடு நேற்று மாலை மஹ்ரிப் தொழுகையை தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது. இந்த மாநாட்டில் அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா, கொழும்பு பெரிய பள்ளிவாசல், முஸ்லிம் சமய பண் பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உலமாக்கள் என பலரும் ஆகிய அமைப்புக்களில் இருந்து குறிப்பிட்ட சிலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது நாட்டின் பல பிரதேசங்களிலும் ரமழான் மாத தலைப்பிறை தென்பட்டதற்கான ஆதார பூர்வமான தகவல்கள் கிடைக்கப்பெற்றதற்கமைய இன்று ரமழான் நோன்பு ஆரம் பிப்பதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தகவல்தான்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சுகவீனம் காரணமாக தாம் இந்தக் கூட்டத்தில் பங்குபற்ற முடியாமல் இருக்கின்றார் என்பதைத் தமக்கு அறிவித்துள்ளார் என நேற்றைய கூட்டத்தின் ஆரம்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தினார்.

இந்தக் கூட்டத்திற்கான அழைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் அவர் பங்குபற்றவில்லை. தான் பங்குபற்றாவிடினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது, அவர் பங்குபற்றுவார் என்று சிறீதரன் நேற்று முன்தினம் கூறியிருந்தார். அவர் அப்படிக் கூறிய செய்தி நேற்றுக் காலை முரசிலும் வெளியாகி இருந்தது.

ஆயினும் நேற்று அந்தச் செய்தி சிறீதரனை மேற்கோள் காட்டி வெளியாகி இருந்தசமயத்தில், எனக்குத்தெரிந்திருந்த ஒரு தகவலை நான் நேற்றுக் குறிப்பிடவில்லை, இன்று குறிப்பிடுகிறேன். அது சிறீதரனுக்கும் கூட நேரத்துடன் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

வயது மூப்பின் காரணமாக சளி தொல்லையால் அவதிப்படும் சம்பந்தன் சுமார் ஒரு வார காலம் கொழும்பு நவலோக ஆஸ்பத்திரியில் மருத்துவ தீவிர சிகிச்சை பிரிவில் தங்கி இருந்து சிகிச்சை பெற்று வருகின்றார். அவர் ஜனாதிபதி கூட்டிய மாநாட்டுக்கு ஆஸ்பத்திரியின் தீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்து புறப்பட்டு வரமாட்டார் என்று நான் நம்பினேன். அதையே நேற்றைய எனது பத்தியில் கோடியும் காட்டியிருந்தேன்.

நேற்றைய கூட்டத்தில் 'தனி ஒரு படைவீரனாக' சுமந்திரன் பங்குபற்றுகின்றார் என்ற என் கருத்து மிகைப்படுத்தப்பட்டதல்ல. அப்படித்தான் நேற்று அந்தக் கூட்டத்தில் சுமந்திரன் வாதத்தைத் தனித்து முன் வைத்தார்.

ஒரு பக்கத்தில், ஜனாதிபதி, பிரதமர், சபைத் தலைவர், நிதி இராஜாங்க அமைச்சர்கள் இருவர், மத்திய வங்கியின் ஆளுநர், திறைசேரியின் செயலாளர் போன்ற அரசாங்க உயர் அதிகாரிகள் அடங்கிய கூட்டத்தில், மறுபுறம் சுமந்திரன் ஏக எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்து வாதிட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டம் தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்ட செய்தியின் சாராம்சம் இது:-

சர்வதேசநாணயநிதியத்தின்வேலைத் திட்டத்தின் அமுலாக்கம் தொடர்பில் வெளிப்படைத்தன்மையின்மை சம்பந்தமாக கணிசமான கரிசனைகளை எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய ஒவ்வொரு பரிந்துரையும் எழுந்தமானமாக வந்ததல்ல. ஒவ்வொன்றுக்கும் புள்ளிவிவர அடிப்படையிலான பகுப்பாய்வு அறிக்கைகள் உண்டு. அவை எங்கே? அவற்றை ஏன் ஒளிக்கின்றீர்கள்? அவற்றை முன்வைத்தால்தானே அந்தப் பரிந்துரைகளின் நியாயத்தன்மை குறித்து நாம் தீர்மானிக்கலாம். விவாதிக்கலாம். முடிவெடுக்கலாம் என்று அரசுத் தரப்பைப் பார்த்து சுமந்திரன் கேள்வி எழுப்பினார்.

அரசாங்கத்திற்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கிய தொழில்நுட்ப உதவி அறிக்கைகளை எதிர்க்கட்சி உறுப்பினர்களால் அணுக முடியாதமை குறித்து சுமந்திரன் கண்டனம் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அவரது விசாரணை, கேள்விக் கணைகள் மற்றும் ஆட்சேபனையைத் தொடர்ந்து, ஜனாதிபதி மற்றும் பிரதமர் இருவரும் எதிர்க்கட்சித் தலைவர்களின் கோரிக்கையின் பேரில் இந்த அறிக்கைகளை வழங்க ஒப்புக் கொண்டனர்.

இது, சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் பரிந்துரைகளை மேலும் தகவலறிந்து மதிப்பீடு செய்ய வாய்ப்பையும் அனுமதியையும் அளிக்கிறது.

வரி மூலம் உடனடி வருவாய் ஈட்டுவதில் உடனடித் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமானால் நிறுத்தி வைக்கும் வரி விகிதத்தை (withholding tax rate) உயர்த்துவதற்குப் பதிலாக, மதிப்பு கூட்டப்பட்ட வரியை (வற் வரியை) 18 வீதமாக உயர்த்துவதற்கான முடிவு போன்ற சில வருவாய் உயர்த்தும் நடவடிக்கைகளுக்குப் பின்னால் உள்ள நியாயம் குறித்து சுமந்திரன் கேள்வி எழுப்பினார்.

மேலும், 2024 பெப்ரவரிக்குள் முடிக்கப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட 15 முன் நடவடிக்கை விடயங்களை அரசாங்கம் செய்யத் தவறியதை சுமந்திரன் விவரமாக எடுத்துரைத்தார்.

சர்வதேசநாணயநிதியத்தின்வேலைத் திட்டம் தொடர்பில் போதுமான வெளிப்படைத்தன்மை இல்லை. சமூகத்தின் ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினர்மீதானதாக்கத்தைக்கருத்தில்கொள்ளாமல், இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அத்தகைய சூழ்நிலையில் எதிர்க்கட்சிகள் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கு ஆதரவளிக்க முடியாது என்று சுமந்திரன் தனது நிலைப்பாட்டைத் தெளிவாக மீண்டும் வலியுறுத்தினார்.

- இவ்வாறு அந்தச் செய்தியின் சாராம்சம் அமைந்திருந்தது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் நேற்றிரவு கொழும்பின் மூத்த ஆங்கில ஊடகவியலாளர் ஒருவருடன் பேசினேன். நேற்றைய கூட்டம் குறித்து அதிகம் உள் வீட்டுத் தகவல்களை அவர் அறிந்திருந்தார் என்று நினைக்கிறேன்.

"சட்டத்துறையில் மட்டுமல்ல, பொருளாதார விவகாரங்களிலும் தனது ஆளுமையை நேற்றைய கூட்டத்தில் சுமந்திரன் நிலை நிறுத்தினார்"- என்பது அவரது கருத்தாக இருந்தது.

"தென்னிலங்கை எதிர்க்கட்சிகள் செய்யத் தவறியதை தனி மனிதராக சுமந்திரன் நின்று வாதாடிச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்" என்றார் அவர்.

"அது சரிதான். தென்னிலங்கை எதிர்க்கட்சிகள் கூட்டத்தை பஷ்கரித்துப் புறமொதுக்கும் போது, இவருக்கு மட்டும் ஏன் இந்த வேலை என்றுதான் தமிழ் கட்சிகளும் மக்களும் நினைக்கின்றார்கள்" - என்றேன் நான்.

"பாவம் சுமந்திரன்!" - என்ற பாணியில் அவர் ஆங்கிலத்தில் ஒரு குறிப்புடன் தொலைபேசி உரையாடலை முடித்துக் கொண்டார்.

எனக்கும் அப்படித்தான் தோன்றியது. தேவையில்லாத வேலை சுமந்திரனுக்கு...!

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வாசகர்களே...?

## காலியில் இருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எதுடன் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

காலி, எல்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலியாகியுள்ளார் என்றும், மூவர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

ரி - 56 ரக துப்பாக்கியைப் பயன்படுத்தியே இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலேயே ஒருவர் பலியாகியுள்ளார். பெண் ஒருவர் உட்பட படுகாயமடைந்த மூவர் கல்லிந்த பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, காலி, அம்பலாங்கொடை பிரதேசத்தில் இடம்பெற்ற மற்றுமொரு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியாகியுள்ளார் என்றும், இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பொலிஸ் அராஜக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு. அகத்தியர் அடிகளாரின் அழைப்பின் பேரில் நல்லை ஆதீனம் முன்பாக மாலை 4 மணிக்குப் போராட்டம் ஆரம்பமானது.

இந்தப் போராட்டத்தில் மதகுருமார், சமயத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மகா சிவராத்திரி பூஜையின்போது வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு வழிபடச் சென்றவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட அட்டூழியங்களைக் கண்டித்தும், கைது செய்யப்பட்ட 8 பேரை உடன் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## ஜனாதிபதியுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி சார்பில் எவரும் பங்கேற்கவில்லை.



சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலில் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் தீர்மானங்களை எட்டுவதற்கான அரசின் அர்ப்பணிப்பு இங்கு வலியுறுத்தப் பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தால் தயாரிக்கப்பட்ட பகுப்பாய்வு தரவுகளுடன் கூடிய அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பி னர் எம். ஏ. சுமந்திரன் வலியுறுத்தினார்.

இந்தச் செயற்பாடுகள் அனைத்தையும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுப்பதே அரசின் நோக்கமாகும் என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அது தொடர்பான தரவு பகுப்பாய்வு அறிக்கைகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் நாடா ளுமன்றத்துக்கும் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படுவதே அரசின் விருப்பம் என்று தெரிவித்த ஜனாதி பதி, இந்த முன்மொழிவுகளைச் சர்வதேச நாணய நிதியத் துடன் மேலும் கலந்துரையாடுவதற்காக நாடாளுமன்ற உறுப் பினர் சுமந்திரன் உட்பட ஏனைய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துரையாடலுக்கு அழைக்கவுள் ளார் என்றும் கூறினார்.

அந்தக் கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளத் தயா ராக இருப்பதாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து இந்த வேலைத்திட்டத்தில் அரசு முன்னெடுக்கும் சாதகமான மற்றும் சரியான வேலைத்திட்டத்துக்குத் தனது ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்தார்.

இருதரப்பு கடன் வழங்குநர்கள், வர்த்தகக் கடன் வழங்கு நர்கள் மற்றும் சர்வதேச இறையாண்மை பத்திரம் வைத்தி ருப்பவர்களுடன் நடைபெற்று வரும் பேச்சுகள் குறித்து திறை சேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, விரிவான விளக் கத்தை அளித்ததுடன், இந்தப் பேச்சுச் சுற்றுக்களை இந்த ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்ப் பதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுகைத் தீர்ப்பு



தொடர்பான அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்த அரசு செயற்பட்டு வருகின்றது என்றும், அதற்கான விரிவான கட்டமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம் என்றும் மத்திய வங்கி யின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நிதி இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிப தியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மேற்குலகின் கவனிப்பு

இலங்கை பிரஜைகளின் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் குடியியல் உரிமை விடயங்களில் அவற்றுக்குச் சவால் விடும் வகையில் சட்டங்களை யாக்கின்ற இலங்கை ஆட்சிப் பீடத்தின் நடவடிக்கைகளை அமெரிக்கா தொடர்ந்தும் முன்னரைப் போல மிக அவதானமாக கண்காணிக்கும் என்று கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் அம்மையார் தெரிவித்திருக்கின்றார்.

இம்மாத தொடக்கத்தில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 55 ஆவது அமர்வையொட்டி இலங்கை விடயம் சம்பந்தமாக இணை அனுசரணை நாடுகள் வெளியிட்டிருக்கும் அறிக்கை மற்றும் உள்ளூர் மற்றும் பிற சர்வதேச அமைப்புக்கள் இந்த விடயங்களை ஒட்டி முன்வைத்து வரும் அறிக்கைகள், கருத்துக்கள் போன்றவற்றைச் சுட்டிக் காட்டியுள்ள அமெரிக்கத் தூதுவர், இலங்கையில் மேற்படி மூன்று விடயங்களையும் ஒட்டி அதிகார பீடத்தில் இருப்போர் எதேச்சாதிகாரமாக எடுக்கும் அடக்குமுறை நடவடிக்கைகளை உலகம் வெறுமனே பார்த்திருக்காது என்பதையும் கோடி காட்டி இருக்கின்றார்.

எதிர்காலத்தில் இலங்கை மக்களின் அடிப்படைச் சுதந்திரங்கள் மற்றும் குடிமையுரிமைக்கான வெளியில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு சட்டத்தையும் இயற்றுவதற்கு முன்னர் இலங்கை அரசாங்கத்திற்கும் சிவில் சமூகம் உட்பட ஏனைய பங்குதாரர்களுக்கும் இடையில் விரிவான ஆலோசனைகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், இது தொடர்பாக உரிய சட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்றும் அமெரிக்கத் தூதுவர் நேரடியாக - வெளிப்படையாக - வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான பிரேரணைகளுக்கு இணை அனுசரணை வழங்கும் கனடா, மலாவி, மொண்டினீக்ரோ, வடக்கு மாசிடோனியா, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டமைப்பை 'இலங்கை தொடர்பான இணை அனுசரணை நாடுகள்' என்று குறிப்பிடுகின்றனர்.

இந்த இணை அனுசரணை நாடுகள் இலங்கையில் மக்களின் அடிப்படைச் சுதந்திரங்கள் மற்றும் குடிமையுரிமைக்கான வெளியில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய மோசமான சட்டங்களை அதிகாரபீடங்கள் நடைமுறைக்குக் கொண்டுவர எடுக்கும் முயற்சிகளைக் கண்கொத்திப் பாம்பாக நுணுக்கமாக அவதானித்து, வெளிப்படையாக எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மார்ச் 04 அன்று, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 55 ஆவது அமர்வில், மேற்படி இலங்கை தொடர்பான இணை அனுசரணை நாடுகளின் குழு, மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் குடிமையுரிமை வெளி தொடர்பான பல சட்டவாக்க முயற்சிகள் குறித்து கவலைகளை எழுப்பியது.

“புதிதாகஇலங்கையில்கொண்டுவரப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டம், இணைய வழித் தகவல் தொடர்புகளைக் கடுமையாகக் கட்டுப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது, மேலும் இதன் கீழ் கிட்டத்தட்ட எல்லா வகையான கருத்துக்களையும் குற்றமாக்கக் கூடும், இது கருத்துச் சுதந்திரத்தின் மீது மோசமான விளைவை ஏற்படுத்தும் சூழலை உருவாக்குகிறது” - என்று இணை அனுசரணை நாடுகள் குறிப்பிட்டன.

எனவே, இலங்கையின் மனித உரிமைகள் மீதான கட்டுப்பாடுகளை நியாயமான முறையில் நீக்குவதற்கான ஏற்பாடுகளை இச்சட்டத்தில் இணைப்பதற்கான திருத்தங்களைச் செய்யுமாறு இலங்கை அரசாங்கத்தை இணை அனுசரணை நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

“எந்தவொரு சட்டத்திற்கும் முன்னதாக நம்பிக்கையை வளர்ப்பதற்கு உள்ளடக்கிய பங்கேற்பு செயல்முறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறோம். எந்தவொரு எதிர்கால ஆணைக்குழுவும் சுயாதீனமாகவும், உள்ளடக்கியதாகவும், அர்த்தமுள்ளதாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் இருக்க வேண்டும், பாதிக்கப்பட்ட சமூகங்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய வேண்டும், முந்தைய நிலைமாறு கால நீதிச் செயன்முறைகளைக் கட்டியெழுப்ப வேண்டும் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான பாதைகளை வழங்க வேண்டும்.

“அடிப்படைச் சுதந்திரங்கள் மற்றும் குடிமையுரிமை இடங்களுக்குத் தீவிரமான தாக்கங்களைக் கொண்ட பிற சட்டங்களை அரசாங்கம் முன்வைக்கும்போது, சிவில் சமூகம் உட்பட பங்குதாரர்களுடன் விரிவான ஆலோசனைகளையும், சட்டமியற்றும் செயல்முறையையும் முன்னெடுக்க ஊக்குவிக்கிறோம்.” - என்றெல்லாம் கூட இணை அனுசரணை நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இந்தப் பின்புலத்திலேயே மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் குடிமையுரிமை வெளியில் அவற்றின் மேம்பாட்டுக்கும், முன்னேற்றத்திற்கும் சவால் விடும் வகையில் இலங்கையில் சட்டமியற்றும் நடவடிக்கைகளை அமெரிக்கா தொடர்ந்து கண்காணிக்கும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் வலியுறுத்தியுள்ள கருத்தை நோக்க வேண்டியுள்ளது.

மொத்தத்தில் இலங்கை அரசின் எதேச்சாதிகார சட்டமாக்கும் பண்பியல்பை அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகள் கண்கொத்திப் பாம்பாக அவதானித்து நிற்கின்றன. அதையே அமெரிக்கத் தூதுவர் தமது கூற்றின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

# குடியுரிமைத் திருத்தச் சட்டம் இந்தியாவில் அமுலுக்கு வந்தது



குடியுரிமை திருத்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவிக்கை வெளியிட்டது. இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கான விதிகள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன. மக்களவைத் தேர்தல் நெருங்கி வரும் சூழலில் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது கவனிக்கத்தக்கது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவில் குடியேறிய முஸ்லிம் அல்லாத மதப் பிரிவினருக்குக் குடியுரிமை வழங்குவதற்கு வழிவகை செய்யும், குடியுரிமை சட்டத் திருத்தச் சட்டம் கடந்த 2019, டிசம்பரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனை அடுத்து குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் பெறப்பட்டது.

இந்தச் சட்டத்தின்படி, பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து 2014, டிசம்பர் 31 திகதிக்குள் இந்தியாவுக்கு வந்த இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பவுத்தர்கள், பார்சிக்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோருக்கு இந்திய குடியுரிமை வழங்கப்படும். அவர்களிடம் எவ்வித ஆவணங்களும் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும்.

இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்தது. குறிப்பாக இஸ்லாமியர்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவாக தொடர் போராட்டங்கள் நடந்தன. இதையடுத்து, இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கான விதிகள் அறிவிக்கப்படுவது நிறுத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், இந்தச் சட்டத்துக்கான விதிகளை மத்திய அரசு நேற்று அறிவித்துள்ளது. குடியுரிமை வழங்குவதற்கான நடைமுறை முழுக்க முழுக்க ஒன்லைன் முறையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான இணைய தளமும் தயாராக இருப்பதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த இணையதளத்தின் மூலம் பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து 2015 இற்கு முன்பாக இந்தியா வந்த இந்துக்கள், சீக்கியர்கள், பார்சிக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் ஆகியோர் தாங்கள் எந்த ஆண்டு இந்தியாவுக்கு வந்தோம் என்பதை அறிவிக்க வேண்டும். அதேநேரத்தில், அவர்கள் பயண ஆவணம் எதையும் அதில் இணைக்க வேண்டிய கட்டாயம் கிடையாது. ஒன்லைன் முறையில் விண்ணப்பிக்கக் கூடியவர்களின் விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு அவர்களுக்கு குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியா மதச்சார்பற்ற நாடு எனும்போது, மதத்தின் அடிப்படையில் குடியுரிமை வழங்குவது கூடாது. இந்திய அரசியல் சாசனம், மதத்தின் பெயரால் ஒருவரை பாகுபாட்டுடன் நடத்தக் கூடாது என்கிறது. ஆனால், இந்த சட்டத்தில் பாகுபாடு காட்டப்படுகிறது. இது அனைவரையும் சமமாக நடத்தவில்லை.

குடியுரிமை திருத்தச் சட்டம் ஏற்கப்பட்டால், அது மதபாகுபாட்டிற்கு சட்ட அங்கீகாரம் தருவதாக ஆகிவிடும். சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகத்தான் இந்த சட்டம் என்றால் இதில் இஸ்லாமியர்களையும் சேர்த்து இருக்க வேண்டும். பாகிஸ்தானில் அகமதியாக்களும், மியான்மரில் ரோஹிங்கியாக்களும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களை விட்டுவிட்டது ஏன்? இலங்கையில் இன்னல்களை சந்தித்த இலங்கை தமிழர்களை இந்த பட்டியலில் சேர்க்காதது ஏன் என்று கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

# அக்னி 5 ஏவுகணை சோதனை வெற்றி; பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு



இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அக்னி-5 ஏவுகணையின் முதல் சோதனையான மிஷன் திவ்யஸ் திராவுக்காக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன விஞ்ஞானிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் தனது எக்ஸ் தளத்தில், "மிஷன் திவ்யஸ்திராவுக்காக நமது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன விஞ்ஞானிகளை நினைத்து பெருமிதம் கொள்கிறேன். இது பலமுறை தன்னிச்சையாக இலக்கு வைக்கக்கூடிய மறு நுழைவு வாகனம் (எம்.ஐ.ஆர்.வி) தொழில்நுட்பத்துடன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அக்னி -5 ஏவுகணையின் முதல் சோதனையாகும்" என்று பதிவிட்டுள்ளார்.

இந்தியாவில் தற்போது அக்னி 3 ஏவுகணை பயன்பாட்டில் இருந்து வரும் நிலையில், அதன் மேம்படுத்தப்பட்ட அக்னி-5 சோதனையை டி.ஆர்.டி.ஓ. கடந்த சில ஆண்டுகளாக மேற்கொண்டு வந்தது.

சுமார் 7 ஆயிரம் கிலோமீற்றர் பயணிக்கக் கூடிய அக்னி ஏவுகணை, அணு ஆயுதத்தை சுமந்து செல்லக்கூடிய திறன் படைத்ததாகும். அந்த வகையில் அக்னி 5 ஏவுகணை சோதனையை டி.ஆர்.டி.ஓ. அதிகாரிகள் வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# யாழ். பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு 14, 15, 16 ஆம் திகதிகளில் 9 அமர்வுகளாக!

## 2 ஆயிரத்து 873 பட்டங்கள் 46 தங்கப் பதக்கங்கள் ஒன்பது புலமைப் பரிசில்கள் மற்றும் 48 பரிசில்கள்!!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, எதிர்வரும் மார்ச் 14 ஆம், 15 ஆம், 16ஆம் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் ஒன்பது அமர்வுகளாக நடைபெறவுள்ளது. பட்டமளிப்பு விழாவின் போது 2 ஆயிரத்து 873 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக விவ்ரப்பு ஒன்று இன்று திங்கட்கிழமை காலை துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. இதன் போது பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான பேராசிரியர் சி. ரகுராம் பட்டமளிப்பு விழாத் தொடர்பான விவரங்களை வழங்கினார். அதன் விவரம் வருமாறு :

பட்டமளிப்பு வைபவமானது, பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் மிகவும் முக்கியமானதாக அமைவதுடன், ஒவ்வொரு பட்டதாரியினதும் வாழ்க்கையில் மிகவும் மறக்க முடியாத நிகழ்வாகவும் இடம்பிடிக்கின்றது. இம்முறை நடைபெறும் பட்டமளிப்பு விழாவானது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஸ்தாபிக்கப்பட்டு 50ஆவது வருடத்தில் பொன்விழா நிகழ்வுகளின் முக்கிய நிகழ்வாக இடம்பெற இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

38 ஆவது பட்டமளிப்பு விழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப்பதக்கங்களையும், புலமைப்பரிசில்களையும் வழங்கிக் கௌரவிப்பார்.

இப்பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம், கலைப் பீடம், பொறியியற் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், இந்துக்கற்கைள் பீடம், சித்தமருத்துவ அலகு மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தைச் சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 441 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து எட்டு உள்வாரி மாணவர்களுக்கும், 330 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன், 94 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 441 பேர் உயர் பட்டத் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை ஒருவரும், முதுமெய்யியல்மாணிப் பட்டத்தை 9 பேரும், சுற்றுச்சூழல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணிப் பட்டத்தை ஒருவரும், பண்பாட்டுக் கற்கைகளில் முது மாணிப் பட்டத்தை 33 பேரும், கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணிப்பட்டத்தை 36 பேரும், தூய சக்தித் தொழில்நுட்பங்களில் முதுமாணிப் பட்டத்தை ஒருவரும், வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தை 73 பேரும், தமிழில் முதுமாணிப்பட்டத்தை 40 பேரும், கல்வியில் முதுமாணிப் பட்டத்தை 195 பேரும், சைவசித்தாந்தத்தில் முதுமாணிப்பட்டத்தை 28 பேரும், கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை (பகுதி நேரம்) 24 பேரும் பெறவிருக்கின்றனர்.

மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 29 பேர் மருத்துவமாணி, சத்திர சிகிச்சை மாணிப் பட்டத்தையும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 94 பேர் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 20 பேர் பிரயோக விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 168 பேர் விஞ்ஞானமாணிப் (பொது) பட்டத்தையும், 24 பேர் கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 25 பேர் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளனர்.

இவர்களுடன் விவசாய பீடத்தைச் சேர்ந்த 96 பேர் விவசாயத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், பொறியியற் பீடத்தைச் சேர்ந்த 119 பேர் பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், தொழில்நுட்பப் பீடத்தைச் சேர்ந்த 97 பேர் உயிர்முறைமைகளில் சிறப்பு தொழில்நுட்பமாணிப் பட்டத்தையும், 80 பேர் பொறியியலில் சிறப்பு தொழில்நுட்பமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளனர்.

அத்துடன், முகாமைத்துக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் இருந்து சிறப்பு வியாபார நிர்வாகமாணிப் பட்டத்தை 276 பேரும், வியாபார நிர்வாகமாணிப் (பொது) பட்டத்தை 7 பேரும், சிறப்பு வணிகமாணிப் பட்டத்தை 81 பேரும், வணிகமாணிப் (பொது) பட்டத்தை இருவரும் பெறவிருக்கின்றனர்.

இவர்களுடன் கலைப்பீடத்தில் இருந்து சிறப்புக் கலைமாணிப் பட்டத்தை 398 பேரும், பொதுக் கலைமாணிப் பட்டத்தை 12 பேரும், மொழிபெயர்ப்புக் கற்கைகளில் சிறப்புக் கலை

**(11ஆம் பக்கம் பார்க்க)**

# யாழ். பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு 14, 15, 16 ஆம் திகதிகளில் 9 அமர்வுகளாக!

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)
மாணிப் பட்டத்தை 21 பேரும் பெற விருக்கின்றனர்.

மேலும், இணைந்த சுகாதார விஞ் ஞான பீடத்திலிருந்து தாதியியலில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தை 38 பேரும், மருந்தகவியல் சிறப்பு மாணிப் பட்டத்தை 49 பேரும், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ் ஞானமாணிப் பட்டத்தை 60 பேரும் பெறவிருக்கின்றனர்.

மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னைய வவுனியா வளா கத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 15 பேர் தகவல் தொழில் நுட்பத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தை யும், 28 பேர் விஞ்ஞானமாணி (பிர யோக கணிதமும் கணிப்பிடலும்) பட்டத் தையும், ஒருவர் விஞ்ஞானமாணி (சூழல் விஞ்ஞானம்) பட்டத்தையும் பெற விருக்கின்றனர். வியாபாரக்கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 42 பேர் செயற்றிட்ட முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 4 பேர் செயற்றிட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத் தையும், 16 பேர் வியாபார முகாமைத் துவமாணி (பொது) பட்டத்தையும், 5 பேர் சந்தைப்படுத்தலில் சிறப்பு வியா பார முகாமைத்துவமாணிப் பட்டத் தையும், 46 பேர் கணக்கியல் மற்றும் நிதியியலில் சிறப்பு வியாபார முகாமைத் துவமாணிப் பட்டத்தையும், 15 பேர் மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத் தையும், 13 பேர் வியாபாரப் பொருளி யலில் சிறப்பு வியாபார முகாமைத்து வமாணிப் பட்டத்தையும் பெறவிருக்கின் றனர். மேலும், தொழில்நுட்பக் கற்கை கள் பீடத்தில் இருந்து 66 பேர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் இள மாணி சிறப்புப் பட்டத்தையும் பெற இருக்கின்றனர்.

இவர்களுடன் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் தொலை தூரக் கற்கைகள் முறைமை மூலம் பட்டக் கற்கைகளைப் பூர்த்தி செய்த 288 பேர் கலைமாணி சிறப்புப் பட்டத் தையும், 42 பேர் சிறப்பு வணிகமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளனர்.

மேலும், 3 பேர் விஞ்ஞானத்தில் உயர் தகைமைச் சான்றிதழையும், ஒருவர் கணினி விஞ்ஞானத்தில் தகை மைச் சான்றிதழையும், 31 பேர் வங்கி யியல் மற்றும் நிதியியலில் தகைமைச் சான்றிதழையும், 24 தொழில்சார் ஆங் கிலத்தில் தகைமைச் சான்றிதழையும், 34 பேர் நுண்நிதியியலில் தகைமைச் சான்றிதழையும், ஒருவர் வியாபார முகாமைத்துவத்தில் தகைமைச் சான் றிதழையும் பெறுவது உறுதிப்படுத்தப் படவுள்ளது.

மேலும், இப்பட்டமளிப்பு விழாவில் சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 46 தங்கப்பதக்கங்களும், 09 புல மைப்பரிசில்களும், 48 பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங் கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழ கையா துரைராசா தங்கப்பதக்கத்தை பீடமட்டத்தில் கலைப் பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், தூய மற்றும் பிரயோக விஞ் ஞானத்தில் சிறந்த செயலாற்றுகைக் கான (Best Performance) பேராசிரியர் கந்தையா குணரட்ணம் தங்கப்பதக்கத் தினை பல்கலைக்கழக மட்டத்தில் இருந்து விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெறவிருக்கின்றமை குறிப் பிடத்தக்கது.

இப்பட்டமளிப்பு வைபவத்தின் ஒரு பாகமாக அமையும் நினைவுப் பேருரை களான சேர். பொன் இராமநாதன் நினைவுப்பேருரை மார்ச் மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கும், சீமாட்டி லீலாவதி இராம நாதன் நினைவுப்பேருரை பி.ப 3.45 மணிக்கும் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவிருக்கின்றன.

சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரையை எக்ஸ்ரர் (நுஓநவநச) பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறையைச் சேர்ந்த பேராசிரியை கிலியன் ஜூலெவ் (Prof. Gillian Juleff), “Monsoon Steel: Serandib’s Contribution to Global History of Science and Technology” என்ற தலைப்பிலும், சீமாட்டி லீலாவதி இராம நாதன் நினைவுப் பேருரையை கொழும் புப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியை ஃ பர்ஸானா எஃவ் ஹனிபா (Prof. Farzana F. Haniffa), “Modern Muslim Citizenship in 1940s Ceylon: Identity, Politics, and Community Aspirations at the Moors Islamic Cultural Home” என்ற தலைப்பிலும் நிகழ்த்தவிருக்கின் றனர். இந்த நிகழ்வுகளுடன் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் 38 ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவம் நிறைவு பெறும்.

# பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றின் தொழில் நடவடிக்கைக்காக சைக்கிள்!



வவுனியாவில் வசிக்கும் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றின் தொழில் நடவடிக்கைக்காகச் சைக்கிள் ஒன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதி யில் 4 பிள்ளைகளுடன் வசித்து வரும் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன் றின் குடும்பத் தலைவி மகாறம்பைக் குளம் பகுதியில் இருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்திற்கு கால்நடையாக வும், பஸ்ஸிலும் சென்று தொழில் நடவ டிக்கையில் ஈடுபட்டு வந்தார். வருமா னத்தின் பெரும் பகுதியை போக்குவரத் திற்காக செலவு செய்த நிலையில் பிள்ளைகளுடன் குடும்பத்தை கொண்டு நடத்த முடியாத நிலையில் அக்குடும்பம் வாழ்ந்து வந்தது.

பல்வேறு சிரமங்களுடன் வாழ்த்து வந்த குறித்த குடும்பத்தினர் ஊடகவிய லாளரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக சரவணமுத்து தம்பதிகளின் முதலாம் ஆண்டு நினைவாக கனடா வில் வசிக்கும் கலைச்செல்வி நகுலன் பிள்ளைகளின் நிதி பங்களிப்பில் உதயம் கனடா அமைப்பின் ஊடாக தொழில் நடவடிக்கைக்கு செல்வதற்காக சைக்கிள் ஒன்று வழங்கி வைக்கப்பட் டது.

வவுனியா, வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயத்தில் வைத்து ஊடகவியலாளர்களால் இந்தச் சைக் கிள் வழங்கி வைக்கப்பட்டது.



# ஜனநாயகத்துக்கான வெஸ்ட்மினிஸ்டர் மன்றத்தின் பிராந்திய பணிப்பாளருடன் சபாநாயகர் சந்திப்பு

ஜனநாயகத்துக்கான வெஸ்ட் மினிஸ்டர் மன்றத்தின் ஆசியா, பசிபிக் மற்றும் அமெரிக்கா பிராந்திய பணிப் பாளர் மதிவ் ஹெட்ஜஸ், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நாடாளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது நாடாளுமன்ற செய லாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் ஜனநாயகத்துக்கான வெஸ்ட் மினிஸ்டர் மன்றத்தின் இலங்கைப் பணிப்பாளர் சஞ்சே விக்னராஜா ஆகி யோரும் கலந்துகொண்டனர்.

இலங்கை நாடாளுமன்றத்துடன் நெருக்கமாக பணியாற்றும் ஜனநாய கத்துக்கான வெஸ்ட்மினிஸ்டர் மன்றத் தினால் நாடாளுமன்றத்திலுள்ள அர சாங்க நிதி பற்றிய குழு, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு உள்ளிட்ட குழுக்களின் செயற்பாடுக ளுக்கு வழங்கும் ஒத்துழைப்பை சபா நாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதன்போது பாராட்டினார்.

அத்துடன், இதன் மூலம் ஜனநாய கத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு முடிந்துள்ளது. இந்த ஆதரவுகளுக்கு நன்றி தெரிவிப்பதாகவும், எதிர்காலத் திலும் ஆதரவுகளை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.







# வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் 15 வயதுச் சிறுவன் மீது துஷ்பிரயோகம்

குருணாகல் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்ற 15 வயது சிறுவனை துஷ்பிரயோகத்துக்கு உட் படுத்திய குற்றச்சாட்டில் வைத்தியசாலை யில் கடமையாற்றும் சிற்றூழியர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட் டுள்ளார் என குருணாகல் தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக் கப்பட்ட பின்னர், இரண்டாவது சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த சிறுவனே இவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப் பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

சிகிச்சை பெற்று வந்த சிறுவனை சிகிச்சை பிரிவின் குளியலறைக்கு அழைத்துச் சென்று சிற்றூழியர் துஷ் பிரயோகம் செய்துள்ளார் எனக் கூறப் படுகிறது.





# அல் – கொய்தா அமைப்பின் யேமன் கிளை தலைவர் காலித் அல் பட்டாபி உயிரிழப்பு

அல்-கொய்தா அமைப்பின் யேமன் கிளையின் தலைவர் காலித் அல் பட்டாபி உயிரிழந்துவிட்டார் என அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

பல ஆண்டுகளாக அரேபிய தீபகற்பத்தில் அல்-கொய்தா குழுவை வழிநடத்திய காலித் அல்-பட்டாபியின் தலைக்கு அமெரிக்கா பரிசை நிர்ணயித்திருந்தது.

சமீபத்திய ஆண்டுகளில் உள்நாட்டுப் போர் மற்றும் சந்தேகத்திற்குரிய அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதல்கள் அதன் தலைவர்களைக் கொன்றதாகக் கருதப்பட்டாலும், நிறுவனர் ஒசாமா பின்லேடனின் கொலைக்குப் பிறகும் செயல்படும் குழுவின் மிகவும் ஆபத்தான கிளையாக நீண்ட காலமாக கருதப்படுகிறது.

அல்-கொய்தா வெளியிட்ட காணொலியில், அல் பட்டாபி, இறுதிச் சடங்கில் ஒரு வெள்ளை நிற அங்கி போர்த்தப்பட்டிருப்பதையும், அல்-கொய்தாவின் கருப்பு மற்றும் வெள்ளைக் கொடியையும் காட்டுகிறது.

முஸ்லிம்களின் புனித நோன்பு மாதமான ரமழான் திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ள நிலையில் அதற்கு முன்னதாக இந்த உயிரிழப்பை இந்த குழு அறிவித்தது.

இந்த அறிவிப்பில், குழுவின் தலைவராக சாத் பின் அதெஃப் அல்-அவ்லாகி பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அல்-அவ்லாகி”அமெரிக்காமற்றும்அதன்நட்புநாடுகளுக்கு எதிரான தாக்குதல்களுக்கு பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்” என்று கூறி, அமெரிக்கா அவரின் தலைக்கு பரிசுத் தொகையை அறிவித்துள்ளது.

# ஹமாஸை முற்றாக ஒழிக்கும் வரை போரை நிறுத்தப்போவதில்லை

## இஸ்ரேல் பிரதமர் மீண்டும் அறிவிப்பு





ஹமாஸ் இயக்கத்தை முற்றாக ஒழிக்கும் வரை போரை நிறுத்தப்போவதில்லை என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

”நாங்கள் ரபா நகருக்குச் செல்வோம், போரில் இருந்து நாங்கள் விலக போவதில்லை, எனக்கென ஒரு சிவப்பு கோடு உள்ளது, அது என்னவென்பதும் உங்களுக்கு தெரியும், கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதியன்று எதிர்பாராத வேளையில் நடந்த பிரச்சினை மீண்டும், ஒருபோதும் நடக்காமல் இருப்பதற்கான விடயத்தையே நாங்கள் முன்னெடுத்துள்ளோம்” – என்றார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்புக்கு இடையே நடந்து வரும் கடுமையான போர் சூழலிடையே, அமெரிக்க ஜனாதிபதி பைடன் அளித்த பேட்டியின்போது, உயிரிழப்புகளை குறைக்க தவறிய நெதன்யாகு, இஸ்ரேலுக்கு உதவுவதற்கு பதிலாக கூடுதலாக வலியை ஏற்படுத்தி வருகிறார் என்று கூறியிருந்தார்.

“போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியபோதும் அதனை ஏற்காமல் தொடர்ந்தும் போர் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்.

இது இஸ்ரேலின் நிலைப்பாட்டுக்கு முரணானது, அது ஒரு பெரிய தவறு என்றே நான் நினைகின்றேன். சர்வதேச நிலைப்பாட்டின் மீது இஸ்ரேல் ஏற்படுத்திய தாக்கத்திற்கு நான் கவலையடைகின்றேன்.

30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் உயிரிழுந்ததனை ஏற்றுக்கொள்ள முடியாத சூழல் உருவாகியுள்ளது.” என்று பைடன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போரானது நான்கில் 3 பங்கு நிறைவடைந்து விட்டது என்றும், இன்னும் ஒரு மாதத்திற்குள் போர் முடிவுக்கு வந்து விடும், 6 அல்லது 4 வாரங்கள் அதற்கு எடுக்கும் என்று நெதன்யாகு கூறியுள்ளார்.







# திருக்கோவிலில் மரதன் ஓடிய 16 வயது மாணவன் மயங்கி விழுந்து சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

## மாணவன் மரணத்துக்கு நீதி கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

(கனகராசா சரவணன்)

திருக்கோவில் பிரதேசத்தில் பாடசாலை ஒன்றின் இல்லவிளையாட்டு போட்டியை முன்னிட்டு நேற்றுத் திங்கட்கிழமை இடம் பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றிய 16 வயது மாணவன் ஒருவன் மயங்கி வீழ்ந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவத்தையடுத்து திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் கவலையீனம் காரணமாக மாணவன் உயிரிழந்துள்ளான் எனக் குற்றச்சாட்டுத் தெரிவித்து வைத்தியசாலைக்கு முன்னால் பொதுமக்கள் ஒன்று திரண்டதையடுத்து அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

திருக்கோவில் 3 ஆம் பிரிவு துரையப்பா வீதியைச் சேர்ந்த 16 வயதுடைய ஜெயக்குமார் விதுர்ஜன் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

தம்பிலுவில் தேசிய பாடசாலையின் வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டியை முன்னிட்டு நேற்றுக் காலை 7.00 மணிக்கு 16 வயது மாணவர்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி பாடசாலையில் இருந்து ஆரம்பித்து திருக்கோவில் அக்கரைப்பற்று பிரதான வீதி ஊடாக களுதாவளை பிள்ளையர் கோவில்வரை சென்று பாடசாலையை நோக்கி ஓடிக் கொண்டிருந்த மாணவன் பாடசாலைக்கு அருகில் சுமார் 7.35 மணியளவில் திடீரென மயங்கி வீழ்ந்ததையடுத்து மாணவனை திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் கொண்டு சென்று அனுமதித்தனர்

இதனை தொடர்ந்து மேலதிக சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் 11 மணிக்கு அனுமதித்த நிலையில் மாணவன் உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் அங்கு மாணவன் சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் உயிரிழந்துள்ளான் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர் எனவும், திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் சுமார் 2 மணித்தியாலயத்திற்கு மேலாக மாணவனுக்கு சிகிச்சையளிக்கவில்லை எனவும், மாணவனின் உடல்நிலை மோசமாக சென்று கொண்டிருந்தும் அவரை உடனடியாக மேலதிக சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லாமல் இழுத்தடித்ததனால் மாணவன் உயிரிழந்துள்ளான் எனவும், வைத்தியர்களின் செயற்பாட்டினாலேயே மாணவன் உயிரிழந்துள்ளான் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர்.



அதேவேளை உயிரிழந்த மாணவனின் சக மாணவர்கள், பிரதேச மக்கள், உறவினர்கள் வைத்தியசாலைக்கு முன்னால் ஒன்றுதிரண்டு மாணவனின் மரணத்திற்கு வைத்தியசாலையே பொறுப்பு, அவருக்கு நீதி வேண்டும், அதேவேளை அப்போது கடமையாற்றிய வைத்தியர்கள் பணிநீக்கம் செய்யப் படவேண்டும் எனக் கோரி தொடர்ந்து வைத்தியசாலைக்கு முன்னால் ஒன்று திரண்டமையை அடுத்து அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து வைத்தியசாலைக்கு முன்னால் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் வரவழைக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக திருக்கோவில் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யானை வேலிகளைப் பாதுகாப்பதற்கு 4,500 உத்தியோகத்தர்கள் இணைப்பு

## அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தகவல்



"யானை வேலிகளைப் பாதுகாப்பதற்காக வனஜீவராசிகள் அமைச்சுக்கு 4,500 பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ள நிதியமைச்சு அனுமதியளித்துள்ளது."

– இவ்வாறு வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்ராதேவி வன்னியாரச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"சர்வதேச காடுகள் தினம் மார்ச் 21 அன்று கொண்டாடப்படுகிறது. இதே வேளை, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் தலா ஒரு செடியை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், வன விரிவாக்க உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாக்கும் அதே வேளையில் வனப்பரப்பை அதிகரிக்கச் செய்யும் திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், மொத்த நிலப்பரப்பில் காடுகளை 32 வீதம் வரை அதிகரிப்பதற்கான திட்டம் தொடர்பில் காடுகளின் எல்லை நிர்ணயம் இந்த வருடத்தில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது எமது அமைச்சின் கீழ் உள்ள வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் விடயமாகும்.

மேலும் உமாஓயா முதல் கட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 20,000 ஏக்கர் நிலங்களுக்கு புதிதாக நீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கீழ் உமாஓயா பகுதிக்கு 45 எம்.சி.எம். குடிநீரை வழங்கவும், 120 மெகாவோட் நீர்மின் சாரத்தை பெறவும் பரீட்சார்த்த பணிகள் நடைபெற்று வருகிறன. இதில், 120 மெகாவோட் நீர் மின் உற்பத்தியும் தேசிய கட்டமைப்பில் சேர்க்கப்பட உள்ளது.

மேலும், மினிப்பே வாய்க்கால் மூலம் சிறுபோகம் மற்றும் பெரும்போகம் இரண்டிலும் விவசாயத்திற்கான 7,500 ஹெக்டெயாருக்கு நீர்ப்பாசன வசதிகள் கிடைத்துள்ளன. அதற்காக 3.5 மீட்டர் மினிபே வாய்க்கால் அபிவிருத்தி செய்யப்பட்டு 74 கிலோமீட்டர் வரை நீர் செல்லத் தேவையான கால்வாய் முழுமையாக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 15,500 குடும்பங்கள் பயன் பெறும். மேலும், வடமேற்கு கால்வாய் ஊடாக வேமெடில்ல நீர்த்தேக்கத்திலிருந்து வடமேற்காக 90 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள 350 சிறிய குளங்கள் மற்றும் 07 நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களுக்கு நீர் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கால்வாயின் நடுவில் இரண்டு கிலோமீற்றர் சுரங்கப்பாதை அமைக்கப்பட உள்ளது, மேலும் இரண்டு முக்கிய குளங்களும் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 75,000 குடும்பங்களுக்கு பாதுகாப்பான நீர்ப்பாசன நீர் மற்றும் 10 எம்.சி.எம். குடிநீர் கிடைக்கும்.

அத்துடன், மொரகஹகந்த நீர்த்தேக்கத்திலிருந்து ஹுருலு ஏரி மற்றும் மஹகனதரவ வரையான 96 கிலோமீற்றர் நீளமான கால்வாய் வடமத்திய மாகாணத்திற்கு அவசியமான நீர்ப்பாசன நீரை கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்டு வருகின்றது. இது 28 கி.மீ சுரங்கப்பாதையையும் கொண்டுள்ளது. 2,300 ஹெக்டெயார் மற்றும் 175,000 குடும்பங்களுக்கு பாதுகாப்பான நீர் வசதி மற்றும் 40 எம்.சி.எம். அளவு குடிநீர் வழங்கப்படும். 1,300 சிறிய குளங்களுக்கு நீர் கொண்டு செல்லவும் முடியும்.

மேலும், யானை வேலிகளைப் பாதுகாப்பதற்காக வனவிலங்கு அமைச்சிற்கு 4,500 பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நிதியமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. அதற்காக புதிய பணியாளர்கள் யாரும் நியமிக்கப்பட மாட்டார்கள். அமைச்சுக்கு இணைத்துக்கொள்ள அங்கீகாரம் பெற்ற பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏற்கனவே யானை வேலியின் பாதுகாப் புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்." – என்றார்.

# அஸ்வெசும இரண்டாம் கட்ட கொடுப்பனவுகள் ஜூன் முதல்



அஸ்வெசும நலன்புரி திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான இரண்டாம் கட்டத்துக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் கால அவகாசம் இந்த மாதம் 15 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

தற்போது, சுமார் 2 மில்லியன் பயனாளிகள் அஸ்வெசும கொடுப்பனவுக்குத் தகுதிபெற்றுள்ளனர்.

இரண்டாவது கட்டத்தின் கீழ் அந்த எண்ணிக்கையை 2.4 மில்லியனாக அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக இந்த ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தில் 205 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.




# தங்காலை பயங்கரவாதத் தடுப்பு முகாமில் ஹரக் கட்டாவை தடுத்துவைக்க உத்தரவு!

'ஹரக் கட்டா' எனும் நதுன் சிந்தக்க விக்ரமரத்னவை தங்காலை பழைய சிறைச்சாலையின் பயங்கரவாத தடுப்புப் பணியகத்தின் தடுப்பு முகாமில் எதிர்வரும் ஏப்ரல் 26 ஆம் திகதி வரை தடுத்து வைக்க நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்போது சந்தேகநபருக்கு எதிராகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் 22 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

365 நாள்கள் தடுப்புக்காவல் உத்தரவிற்கமைய தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட நிலையிலயே ஹரக் கட்டா எனும் நதுன் சிந்தக்க விக்ரமரத்ன நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது ஹரக் கட்டா தப்பிச்செல்ல முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் தொடர்பிலும் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 653 பேர் கைது



யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 653 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 586 பேரும், குற்றத்தடுப்புப் பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள 67 சந்தேகநபர்களும் அடங்குகின்றனர் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஹெரோயின், ஐஸ், கஞ்சா, மாவா போதைவில்லைகள் உள்ளிட்ட பல போதைப்பொருள்களையும் மேற்படி கைதுகளை ஒட்டிய சுற்றிவளைப்புகளின் போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம், பொலிஸ் விசேட பணியகத்தின் பட்டியலில் இருந்த 18 சந்தேகநபர்களும் உள்ளடங்குகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# குகுலபொல விகாரையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்



மஹியங்கனை, தம்பனை, குகுலபொல பகுதியில் உள்ள விகாரை ஒன்றில் நேற்றுத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் விகாரையில் இருந்த எவருக்கும் காயம் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விகாராதிபதி உறங்கிக் கொண்டிருந்த அறையை இலக்கு வைத்து இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமைக்கான காரணம் இதுவரைக் கண்டறியப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# 2023 இல் வாகனப் பதிவுகள் 23.3 சதவீதத்தால் அதிகரிப்பு

2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2023 ஆம் ஆண்டின் ஜனவரி மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையில் புதிய வாகன பதிவுகள் 23.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளன என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதன்படி, 2022 ஆம் ஆண்டில் 19 ஆயிரத்து 218 வாகனங்களும், 2023 ஆம் ஆண்டில் 23 ஆயிரத்து 698 வாகனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், இந்த காலப்பகுதியில் புதிய மோட்டார் சைக்கிள் பதிவுகளும் அதிகரித்துள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 12.03.2024




இன்று நீங்கள் பொறுமையிழந்து காணப்படுவீர்கள். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மூலம் ஆறுதல் பெறலாம். தேவையற்ற வார்த்தைகளை தவிர்க்க கவனமாக உரையாட வேண்டும்.

அதிகப் பணிகள் காரணமாக பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் பணியில் தவறுகள் குறைய வாய்ப்புள்ளது.

குறைந்த புரிந்துணர்வு உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நீங்கள் அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. சுறுசுறுப்பாக உணர மாட்டீர்கள். யோகா பயிற்சி மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தலாம்.




இன்று இனிமையான தருணங்கள் காணப்படும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் வர வாய்ப்புள்ளது. முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

பணியிடத்தில் சாதகமான பலன்கள் காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதன் மூலம் உங்கள் செய்திறன் நிரூபணமாகும். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

நல்ல புரிந்துணர்வின் காரணமாக உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனைத் தொடர்ந்து பராமரியுங்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். கையிலிருக்கும் உபரி பணத்தை சேமிக்கும் வாய்ப்பு காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்றுநீங்கள்தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். இன்று கூடுதல் நன்மைகள் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். மேலதிகாரிகள் உங்கள் செயல் திறனைப் பாராட்டுவார்கள். தொடர்ந்து சிறப்பாக பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடத்திற்கு செல்வீர்கள். இருவரும் பரஸ்பரம் கருத்துக்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

பண வரவு அதிகமாக இருக்கும். இதனால் உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும். இந்த வாய்ப்பை பயன்படுத்தி உங்கள் எதிர்காலத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.




இன்று சவால்கள் நிறைந்து காணப்படலாம். மனக் குழப்பங்களை எதிர்கொள்ள நேரலாம்.இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இறுக்கமான பணிகளை முடிக்க திட்டமிடல் அவசியம்.

உங்கள் துணையிடம் அமைதியாகப் பேசுவதன் மூலம் நீங்கள் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இயலும். அவரிடம் இனிமையாகப் பழக முயலுங்கள்.

பண வரவு குறைந்து காணப்படும். சூழ்நிலையை சமாளிக்க கவனமாக பணத்தை கையாள வேண்டும்.

அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் வகை உணவுகளை தவிர்ப்பதன் மூலம் இந்தச் சூழ் நிலையைக் கட்டுப்படுத்தலாம்.




இன்று சாதகமான நாளாக அமையாது. பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். நற்பலன் காண உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

குறித்த நேரத்தில் பணியை முடிப்பது கடினமாக இருக்கும். அதிகப் பணிகள் காரணமாக நீங்கள் மேற்கொள்ளும் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. நீங்கள் இருவரும் கலந்தாலோசித்து குடும்ப பிரச்சினையை தீர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். அதிக செலவுகள் கவலையை அளிக்கும்.

பல் வலி வர வாய்ப்புள்ளதால் இன்று பற்களில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று மகிழ்ச்சியும் உற்சாகமும் நிறைந்திருக்கும். திரைப்படம் பார்த்தல், இசை கேட்டல் போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.

பணிகளைக் குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். முன்கூட்டிய திட்டமிடல் மூலம் பணிகளை சரியாக பராமரிக்கலாம். இதனால் அமைதியான மனநிலையில் இருப்பீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகள் பேசி நல்ல புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் திருப்தியான உறவு உள்ளது என்பதை இது உறுதிப்படுத்தும்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று நீங்கள் உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் காணப்படுவீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி காண்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் புதிய வாய்ப்புகளும் வளர்ச்சியும் காணப்படும். இதனால் திருப்தியான மனநிலை காணப்படும். உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத் தேவைக்காக பணம் செலவு செய்வீர்கள்.




இன்று நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். முக்கிய முடிவுகள் எதையும் இன்று எடுக்காதீர்கள். அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய நேரலாம். எனவே பணிகளை கவனமாகக் கையாளவும். இன்றைய பணிகளை மேற்கொள்ள திட்டமிட வேண்டியது அவசியம்.

குடும்ப பிரச்சினை ஒன்றில் உங்கள் துணையை நீங்கள் சமாளிக்க இயலாத நிலை இருக்கும். நீங்கள் வேறுபாட்டை ஒதுக்கித் தள்ளி உங்கள் துணையுடன் புதிய பாதையில் பயணிக்க வேண்டும். இன்று அதிக செலவுகளால் வருத்தப்படுவீர்கள். இன்று உங்களால் சேமிக்க இயலாது.உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்க நீங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.03.2024


தனுசு

இன்று சிறப்பான பலன்கள் கிடைக்க உகந்த நாள் அல்ல. என்றாலும். ஆன் மீக ஈடுபாடு மற்றும் இறை வழிபாடு மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளை சிறப்பாக மேற் கொள்ள கவனமும் விழிப்பும் தேவை. உங்கள் பாதையில் சில தடைகள் காணப்படும். சிறந்த பலன் காண திட்டமிட வேண்டியது அவசியம்.

வேறுபட்ட மனநிலை சவாலாக காணப்படும். என்றா லும் பரஸ்பரம் வேறுபாட்டை களைந்து சுமூகமாக பிரச் சினைகளை தீர்ப்பது நல்லது.

இன்று பணவரவு குறைந்து காணப்படும். அதிக செலவுகளை விவேகத்துடன் கையாள வேண்டும். முடிந்த அளவு சிக்கனத்தை கடைபிடிக்க வேண்டும்.

இறை வழிபாடு மேற்கொள்வதன் மூலம் உங்கள ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


கும்பம்

இன்று உங்கள் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும். என்றாலும் தேவை யற்ற விஷயங்களுக்கு வருந்தாதீர்கள். புத்திசாலித் தனத்தை பயன்படுத்தி சாதகமான பலன்களைக் காணுங்கள்.

பணியில் தவறுகள் நேராமல் இருக்க கவனம் அவசியம். எனவே உங்கள் பணிகளை சரி பார்த்து தவறின்றி வழங்கவும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் சுமூகமான சூழ்நிலை காணப்படும். இருவரும் குடும்ப பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வீர்கள்.

பண வரவு எதிர்பார்த்த அளவுக்குக் காணப்படாது. இன்று நிதி சம்பந்தப்பட்ட எந்த முக்கிய முடிவுகளையும் எடுக்க வேண்டாம். சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க குளிர் பானங்களை தவிர்க்கவும். சளி சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.


மகரம்

இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். நற்பலன்கள் நடக்கும் நாள். உங்கள் முயற்சிகளுக்கு பலன் கிடைக் கும்.இன்றைய செயல்கள் எளிதாக நடக்கும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டம் நிறைந்து காணப்படும். பண வரவு அதிகமாக இருக்கும். உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயர்வதற்கான வாய்ப்பும் உள்ளது. ஆரோக் கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.


மீனம்

இன்று அனுகூலம் சற்று குறைந்து காணப்படும். பாதகமான பலன்களால் கவலை காணப்படும். என்றாலும் மனதை மகிழ்சியாகவும் அமைதியாகவும் வைத்துக் கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் சிறிது மந்தமாக இருக்கும். சில பிரச்சினைகள் எழ வாய்ப்புள்ளதால் நீங் கள் சக பணியாளர்களுடன் கவனமாகப் பழக வேண்டும். சரியான நேரத்தில் பணிகளை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். நீங்கள் உங்கள் கருத்துகளை உங்கள் துணையிடம் வெளிப்படையாக பகிர மாட்டீர்கள். இதனால் உங்கள் துணையின் நம்பிக்கை உணர்வு பாதிக்கப்படும். எனவே இந்தப் போக்கை தவிர்த்து சிறப்பாக நேரத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும்.பணத்தை கையாளும் போது கவனமான சிக்கனமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.





